


புதுகை
# வரலாறு நாளிதழ்

WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351




புதன் ❖ ஜீன். 15, 2022 | சென்னை & புதுக்கோட்டை | 4 பக்கம் ❖ வரலாறு 7 ❖ இதழ் 251 ❖ ரூ.10

## முகநூல் மூலம் வெளிநாட்டு பெண்ணை காதலித்து திருமணம்

# காப்பு

## மூன்றாவது திருமணத்திற்கு முயன்ற கல்யாண மன்னனுக்கு 37 வருட சிறை தண்டனை, குடும்பத்தாருக்கும் அபராதம் விதித்து புதுக்கோட்டை நீதிமன்றம் தீர்ப்பு





புதுக்கோட்டை, ஜூன்.15-

முகநூல் மூலம் சிங்கப்பூர் பெண்ணை காதலித்து ஏற்கனவே திருமணமானதை மறைத்து பதிவுத் திருமணம் செய்து வரதட்சணையாக 72 லட்சத்து 85ஆயிரம் ரூபாய் பணத்தை பெற்றுக்கொண்டு ஏமாற்றி மற்றொரு திருமணம் செய்ய முயன்ற புதுக்கோட்டையை சேர்ந்த இளைஞருக்கு 37 ஆண்டுகள் சிறை தண்டனையும் ரூ. 2.60 லட்சம் அபராதமும் அவரது குடும்பத்தை சேர்ந்த தாய், சகோதரி, சகோதரன், சித்தப்பா உள்ளிட்டோருக்கு தனித்தனியாக தண்டனை வழங்கி புதுக்கோட்டை மகிளா நீதிமன்றம் அதிரடி தீர்ப்பு வழங்கியிருப்பது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

புதுக்கோட்டை நகரப் பகுதிக்கு உட்பட்ட வசந்தபுரி நகரைச் சேர்ந்தவர் சோலைகணேசன். இவர் திருமணமாகி விவாகரத்து பெற்றவர். இந்நிலையில் சென்னை, பெரம்பூர் பகுதியை பூர்வீகமாகக் கொண்டு, சிங்கப்பூரில் குடியுரிமை பெற்று அங்கேயே வசித்து வரும் ஆரோக்கிய மேரி என்ற ஆக்ணஸ் சங்கீதா என்பவரை முகநூல் மூலம் காதலித்து ஏற்கனவே திருமணமாகி விவாகரத்தானதை மறைத்து, கடந்த 2010ம் ஆண்டு ஆரோக்கியமேரியை சோலை கணேசன் சிங்கப்பூரில் பதிவு திருமணம் செய்துள்ளார்.

இதனையடுத்து சோலை கணேசன் மற்றும் அவரது குடும்பத்தினர் சிங்கப்பூர் சென்று மகிழ்ச்சியுடன் இருந்த நிலையில் அவரும் அவரது குடும்பத்தினரும் ஆரோக்கியமேரியிடம் எழுபத்தி இரண்டு லட்சத்து 85,000 ரூபாய் பணத்தை வரதட்சணையாக பெற்றுக்கொண்டு, மேலும் வரதட்சணை கேட்டு தொந்தரவு செய்தது மட்டுமல்லாமல் சோலை கணேசனின் குடும்பத்தினர் ஒன்றுகூடி ஆரோக்கியமேரிக்கு தெரியாமல் சோலைகணேசனுக்கு புதுக்கோட்டையில் 3வது திருமணத்திற்கு ஏற்பாடு செய்து வந்துள்ளனர்.

இந்நிலையில் இதனை அறிந்த ஆரோக்கியமேரி கடந்த 2018ம் ஆண்டு புதுக்கோட்டை அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் சோலைகணேசன் மற்றும் அவரது குடும்பத்தினர் மீது புகார் அளித்தார். இதனையடுத்து காவல்துறையினர் வழக்குப் பதிவு செய்து சோலைகணேசனை கைது செய்தனர்.

இந்நிலையில் இந்த வழக்கானது புதுக்கோட்டை மகிளா நீதிமன்றத்தில் நடைபெற்று வந்த நிலையில், வழக்கை விசாரணை செய்த நீதிபதி சத்யா குற்றவாளிகள் மீது சுமத்தப்பட்ட குற்றம் உறுதி செய்யப்பட்டதால் திருமணமானதை மறைத்து ஆரோக்கிய மேரியை பதிவு திருமணம் செய்து கொண்டு அவரை ஏமாற்றி மற்றொரு திருமணம் செய்ய முயன்ற சோலைகணேசனுக்கு 37 ஆண்டுகள் சிறை தண்டனையும் 2.60 லட்சம் ரூபாய் அபராதமும் அவரது தாய் ராஜம்மாளுக்கு 19 ஆண்டுகள் சிறை தண்டனையும் 1.90 லட்சம் ரூபாய் அபராதமும், அவரது சகோதரி கமலஜோதிக்கு 15 ஆண்டுகள் சிறை தண்டனையும் 1.50 லட்சம் ரூபாய் அபராதமும் , அவரது சகோதரர் முருகேசனுக்கு 16 ஆண்டுகள் சிறை தண்டனையும் 1.60 லட்சம் ரூபாய் அபராதமும் அவரது சித்தப்பா நாராயணசாமிக்கு 19 ஆண்டுகள் சிறை தண்டனையும் 1.90 லட்சம் ரூபாய் அபராதமும் விதித்து தீர்ப்பளித்தார். இதனையடுத்து குற்றவாளிகள் அனைவரும் காவல்துறையினர் பாதுகாப்போடு திருச்சி மத்திய சிறையில் அடைக்கப்பட்டனர்.

## அதிமுக ஆலோசனைக் கூட்டத்தில் ஒற்றைத் தலைமை வேண்டி கோஷம்



சென்னை ஜூன்.15-

சென்னையில் நடைபெற்ற அதிமுக ஆலோசனைக் கூட்டத்தில் தொண்டர்கள் சிலர் ஒற்றை தலைமை வேண்டும் என கோஷம் எழுப்பியதால் பரபரப்பு ஏற்பட்டது.

சென்னை ராயப்பேட்டையில் உள்ள அதிமுக தலைமை அலுவலகத்தில் கட்சி நிர்வாகிகள், மாவட்ட செயலாளர்கள் கூட்டம் நேற்று நடைபெற்றது. இக்கூட்டத்துக்கு அதிமுக ஒருங்கிணைப்பாளர் ஓ. பன்னீர்செல்வம், இணை ஒருங்கிணைப்பாளர் எடப்பாடி பழனிசாமி ஆகியோர் தலைமை வகித்தனர். வரும் 23-ம் தேதி பொதுக்குழு மற்றும் செயற்குழுக் கூட்டங்கள் நடைபெறவுள்ள நிலையில், இந்த ஆலோசனை நடைபெற்றது.

இந்நிலையில், அலுவலகத்திற்கு வெளியே நின்றிருந்த தொண்டர்களில் சிலர் அதிமுகவுக்கு ஒற்றை தலைமை வேண்டும் என தொடர்ந்து கோஷம் எழுப்பினர். அப்போது அங்கிருந்த மற்றொரு தரப்பினர் ஓ.பன்னீர் செல்வம் தான் கட்சி தலைமை பதவிக்கு வர வேண்டும் என கோஷமிட்டனர். இதனால் அங்கு பரபரப்பான சூழல் எழுந்தது. இதையடுத்து, அதிமுக கட்சி அலுவலக நிர்வாகிகள் நேரடியாக வந்து சமரசத்திற்கு ஈடுபட்டு கோஷம் எழுப்பியவர்களை சமாதானப்படுத்தினர்.

## உ.பி விவகாரத்தில் நடவடிக்கை எடுங்கள் உச்ச நீதிமன்றத்துக்கு முன்னாள் நீதிபதிகள் கடிதம்



உத்தரப்பிரதேசம் ஜூன்.15-

உத்தரப் பிரதேசத்தில் இஸ்லாமிய போராட்டக்காரர்கள் வீடுகளை அதிகாரிகள் இடிப்பது குறித்து உச்ச நீதிமன்றம் தாமாக முன்வந்து விசாரிக்க வேண்டும் என்று 12 உச்ச நீதிமன்ற, உயர் நீதிமன்ற முன்னாள் நீதிபதிகள் கடிதம் எழுதியுள்ளனர்.

இந்தக் கடிதத்தில், முன்னாள் உச்ச நீதிமன்ற நீதிபதிகள் சுதர்ஷன் ரெட்டி, கோபால கௌடா, கே.கே.கங்குலி, உயர் நீதிமன்ற முன்னாள் தலைமை நீதிபதி, ஏ.பி. ஷா, கே.சந்துரு, முகம்மது அன்வர், சாந்தி பூஷன், இந்திரா ஜெய்சிங், சந்தர் உதய் சிங், ஸ்ரீராம் பன்சு, ஆனந்த் க்ரோவர், பிரசாந்த் பூஷன் ஆகியோர் கடிதம் கையெழுத்திட்டுள்ளனர்.

அந்தக் கடிதத்தில், ‘உத்தரப்பிரதேசத்தில் சட்டம் ஒழுங்கை சீரழிப்பவர்களை குறிப்பாக இதில் ஈடுபட்டுள்ள உயர்மட்ட அளவிலான காவல் அதிகாரிகள் மற்றும் மாநில அதிகாரிகள் கைது செய்ய உச்ச நீதிமன்றம் தாமாக முன்வந்து நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று நாங்கள் வலியுறுத்துகிறோம். இது குடிமக்களின் அடிப்படை உரிமைக்கு எதிரான கொடூரமான ஒடுக்குமுறையாகும். போராட்டக்காரர்கள் அமைதியான முறையில் போராட்டம் செய்வதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்தாமல் உத்தரப் பிரதேச மாநில அரசு நிர்வாகம் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் மீது வன்முறையை ஏவிவிடுகிறது.

சட்டவிரோதமாக போராடுபர்கள் மீது தேசிய பாதுகாப்புச் சட்டம் 1980 மற்றும் உத்தரப் பிரதேச குண்டர்கள் மற்றும் சமூக விரோத செயல்கள் தடுப்புச் சட்டம் 1986-ன் படி நடவடிக்கை எடுக்க உத்தரப் பிரதேசம் வழிகாட்டியுள்ளார். இது போராட்டத்தில் ஈடுபடுபவர்களை சட்டவிரோதமாக துன்புறுத்த வழிவகை செய்யும். உத்தரப் பிரதேச காவல்துறை 300-க்கும் மேற்பட்டவர்களைக் கைது செய்துள்ளது.

காவல்துறை காவலில் இருக்கும் இளைஞர்கள் லத்தியால் தாக்கப்படும் வீடியோம், போராட்டத்தில் ஈடுபடுபர்களின் வீடுகள் எந்தவித முன்னறிவிப்பின்றி இடிக்கப்படும் வீடியோவும் போராட்டத்தில் ஈடுபடும் இஸ்லாமியர்கள் குறிவைக்கப்பட்டு காவல்துறையால் தாக்கப்படும் வீடியோவும் சமூகவலைதளங்களில் வைரலாகி தேசத்தின் மனசாட்சியைஉலுக்கியுள்ளது. ஆளும் அரசால் கொடூரமான மிருகத்தனமான நடவடிக்கை என்பது ஏற்றுக்கொள்ள முடியாதது. சட்டத்தின் ஆட்சியை சீர்குலைத்தல், குடிமக்களுக்கான உரிமைகள் மீதான வன்முறையும், அரசியலமைப்புச் சட்டத்தையும் அரசால் உறுதிப்படுத்தப்பட்டுள்ள அடிப்படை உரிமையையும் கேலிக்கூத்தாக்குவதாகும்’ என்று குறிப்பிடப் பட்டுள்ளது.



► தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நேற்று தலைமை செயலகத்தில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சர் மா. சுப்பிரமணியனை சந்தித்து, உணவு பாதுகாப்பு தினத்தையொட்டி7.6. 2022அன்று புதுதில்லியில்ஒன்றிய சுகாதாரம் மற்றும் குடும்பநல அமைச்சகத்தின் சார்பில் நடைபெற்ற விழாவில், இந்திய உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையத்தின் 4- வது மாநில உணவு பாதுகாப்பு குறியீடு, 2021 - 2022 ஆம் ஆண்டிற்கானதரவரிசையில் அடிப்படையில் பெரிய மாநிலங்களில் தமிழ்நாடு முதலிடம் பெற்றதாகவும் மற்றும் நாட்டில் உணவு பாதுகாப்பு தொடர்பான திட்டங்களை சிறப்பாக செயல்படுத்திய 75 மாவட்டங்களில் தமிழ்நாட்டை சார்ந்த திருவள்ளூர், காஞ்சிபுரம், சேலம், கோயம்புத்தூர், சென்னை, ஈரோடு, திருநெல்வேலி, மதுரை, தூத்துக்குடி, திருப்பூர் மற்றும் திண்டுக்கல் ஆகிய 11 மாவட்டங்கள் ஒன்றிய அரசால் தேர்வு செய்யப்பட்டு இதற்காக வழங்கப்பட்ட விருது மற்றும் பாராட்டு சான்றிதழ்களைகாண்பித்து வாழ்த்து பெற்றார், உடன் தலைமை செயலாளர் வெ. இறையன்பு, மருத்துவம் - மக்கள் நல்வாழ்வு துறை முதன்மை செயலாளர் செந்தில்குமார், உணவு பாதுகாப்பு துறை இயக்குனர் மற்றும் கூடுதல் ஆணையர் தேவபார்த்தசாரதி, உணவு பாதுகாப்பு துறை சுகாதார அலுவலர் முருகானந்த், 11 மாவட்ட நியமன அலுவலர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

## 18 மாதத்தில் 10 லட்சம் பேரை மத்திய அரசு பணிகளில் சேர்க்க பிரதமர் மோடி உத்தரவு



டெல்லி ஜூன்.15-

அடுத்த ஒன்றரை ஆண்டுகளில் 10 லட்சம் பேரை மத்திய அரசு பணிகளில் சேர்க்க பிரதமர் மோடி உத்தரவிட்டுள்ளார்.

அடுத்த ஒன்றரை ஆண்டுகளில் 10 லட்சம் பேரை மத்திய அரசு பணியில் சேர்க்க தேர்வு செய்ய வேண்டும் என்று பிரதமர் மோடி உத்தரவிட்டுள்ளார். இது தொடர்பாக பிரதமர் நரேந்திர மோடி அலுவலகம் தனது அதிகாரப்பூர்வ டுவிட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ளது. அதில், அடுத்த ஒன்றரை ஆண்டுகளில் 10 லட்சம் பேரை மத்திய அரசு பணியில் பணியமர்த்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பிரதமர் நரேந்திர மோடி உத்தரவிட்டுள்ளார். மேலும் அனைத்துத்துறை அமைச்சகங்களில் பணியாளர்கள் பற்றாக்குறை குறித்து ஆய்வு நடத்தவும் அறிவுறுத்தியுள்ளார்.மத்திய அரசு துறையில் காலியாக உள்ள பணியிடங்கள் குறித்து ஆய்வு நடத்திய பிரதமர் மோடி இந்த அதிரடியான உத்தரவு பிறப்பித்துள்ளார்.



► புதுக்கோட்டை எஸ்பி ஆபிஸ் அருகில் உள்ள பொன்னம்பட்டி ஓட்ட குளத்தில் நாளொன்றுக்கு 20 லட்ச ரூபாய் மதிப்பிலான கிராவல் மண் கொள்ளை அடிக்கப்படுகிறது. அதிகாரிகள் யாரும் கண்டு கொள்வதாக தெரியவில்லை சமீப நாட்களாக புதுக்கோட்டை மாவட்டத்தில் பரவலாக மணல் மற்றும் கிராவல் கொள்ளை நடைபெறுகிறது என புதுகை வரலாறு கள ஆய்வில் தெரியவருகிறது.

### புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி அருகே

## அபாய நிலையில் உள்ள பள்ளி கட்டிடங்களை புதுப்பிக்க பொதுமக்கள் கோரிக்கை





ஆலங்குடி, ஜூன்.15-

புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி அருகே ஆலங்காடு ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில், சுமார் 50 மாணவ மாணவிகள் படித்து வரும் நிலையில் இப்பள்ளியில் இருந்த 50 ஆண்டுகள் பழமை வாய்ந்தஓட்டுக்கட்டிடம் கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்பு சிதலமடைந்து இடிந்து விழும் அபாய நிலையில் உள்ளது. பள்ளி குழந்தைகளின் பாதுகாப்பை கருத்தில் கொண்டு அந்த பழமை வாய்ந்த சிதிலமடைந்த கட்டிடத்தை இடித்துவிட்டு புதிய கட்டிடம் கட்டித்தர வேண்டும் என கிராமத்தைச் சேர்ந்த பெற்றோர்கள் தொடர்ந்து கோரிக்கை விடுத்து வந்தனர். இந்நிலையில் இன்னும் அந்த கட்டிடத்தை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இடிக்கவில்லை.

இதனிடையே பள்ளி குழந்தைகளுக்காக கட்டப்பட்டு இருந்த மற்றொருகட்டிடத்திலும் தற்போது பராமரிப்பு பணிகள் நடைபெற்று வருவதாலும் அந்தப் பள்ளியில் கல்வி பயிலும் 50க்கும் மேற்பட்ட குழந்தைகள் அருகேஉள்ள பெருமாள் கோயிலிலும் கலையரங்கத்திலும், சமுதாய கூடத்திலும் மாணவ, மாணவிகளுக்கு பாதுகாப்பற்ற முறையில் பாடம் நடத்தப்பட்டு வருகிறது.இதனால் பள்ளி குழந்தைகளின் பாதுகாப்பு கேள்விக்குறியாகி உள்ளது.

பள்ளிக்குழந்தைகளின் பாதுகாப்பை கருத்தில் கொண்டு பழமைவாய்ந்த பள்ளிகட்டிடத்தைஇடிக்க வேண்டும், உடனடியாக இப்பள்ளிக்கு கூடுதல் கட்டிடம் கட்டித்தர வேண்டும் என பெற்றோர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். இது குறித்து திருவரங்குளம் வட்டார கல்வி அலுவலர் கருணாகரினிடம் கேட்டபோது அவர் கூறியதாவது,

சிதிலம் அடைந்த கட்டிடம் விரைவில் இடிக்கப்படும் என்றும், தற்போது உள்ள கட்டிடத்தில் நடந்துவரும் பராமரிப்பு பணி 15 நாட்களுக்குள் நிறைவடைந்து விடும் என்றும், கூடுதல் கட்டிட வசதி அமைத்துத் தர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும், அதேபோல் கழிப்பறை இல்லாத இந்த பள்ளிக்கு புதிய கழிப்பறை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் கூறியுள்ளார்.

# இன்று




## சிந்திப்போம்.... செயல்படுவோம்

தேவையில்லாதவர்களிடமும் தகுதியில்லாதவர்களிடமும் நாம் யார் என்பதை நிரூபிக்காமல் இருப்பதே சிறந்த புத்திசாலித்தனம்!



தங்கமான தெரு - நெல்லுமண்டி தெரு
ஸ்ரீ புவனேஸ்வரி ஜுவல்லர்ஸ்
3179, நெல்லுமண்டி தெரு, புதுக்கோட்டை - 622 001. போன் : 04322 222504, 222 505

| தங்கம் | கிராம் | 22 கேரட் தங்கம் | 24 கேரட் தங்கம் |
|---|---|---|---|
| விலை | 1 கிராம் | Rs.4,835 | Rs.5,234 |

## வரலாற்றில் இன்று



1889 ஈபெல் கோபுரம் பாரிசில் பொதுமக்களுக்காக அதிகாரபூர்வமாகத் திறந்துவிடப்பட்டது.

1910 ஐந்தாம் ஜோர்ஜ் அவரது தந்தை ஏழாம் எட்வேர்டின் இறப்பை அடுத்து ஐக்கிய இராச்சியத்தின் மன்னனாக முடி சூடினார்.

1916 21 லெபனான் தேசியவாதிகள் பெய்ரூட்டில் தூக்கிலிடப்பட்டனர்.

1916 பிரெஞ்சு அரசுக்கு எதிராகக் கிளர்ச்சியைத் தூண்டி விட்டதாகக் குற்றம் சாட்டப்பட்ட வியட்நாம் பேரரசர் தூய் தான் கைது செய்யப்பட்டார். இவர் பின்னர் ரீயூனியன் தீவுக்கு நாடு கடத்தப்பட்டார்.

1937 இன்டன்பர்க் பேரிடர்: செருமனியின் இன்டன்பேர்க் என்ற வான்கப்பல் லேக்கேர்சுடு, நியூ செர்சியில் தீப்பிடித்ததில் 36 பேர் உயிரிழந்தனர்.

1942 இரண்டாம் உலகப் போர்: பிலிப்பீன்சில் நிலை கொண்டிருந்த கடைசி அமெரிக்கப் படைகள் சப்பானிடம் சரணடைந்தன.

1945 இரண்டாம் உலகப் போர்: கிழக்கு ஐரோப்பாவின் கடைசிப் பெரும் சமர் பிராகா நகரில் ஆரம்பமானது.

1954 ரோஜர் பேனிஸ்டர் ஒரு மைல் தூரத்தை நான்கு நிமிடங்களுக்குள் கடந்த வீரர் என்ற சாதனையை ஏற்படுத்தினார்.

1960 வெஸ்ட்மின்ஸ்டர் மடத்தில் இருந்து முதல் தடவையாக அரச திருமணம் ஒன்று தொலைக்காட்சியில் நேரடியாக ஒளிபரப்பப்பட்டது. இளவரசி மார்கரெட், அந்தனி ஆர்ம்ஸ்ட்ரோங்-யோன்சு ஆகியோரின் திருமணத்தை 20 மில்லியன் பேர் கண்டுகளித்தனர்.

1967 சாகிர் உசேன் இந்தியாவின் முதல் முசுலிம் குடியரசுத் தலைவரானார்.

1975 100,000 ஆர்மீனியர் பெய்ரூட்டில் நடந்த ஆர்மீனிய இனப்படுகொலையின் 60-வது நினைவுநாள் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

1976 இத்தாலியில் இடம்பெற்ற 6.5 அளவு நிலநடுக்கத்தில் 900-978 பேர் உயிரிழந்தனர்.

1984 சியோல் நகரில் 103 கொரிய மாவீரர்களை திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பர் புனிதர்களாக அறிவித்தார்.

1988 நோர்வேயில் வானூர்தி ஒன்று டோர்காட்டன் மலையுடன் மோதியதி வீழ்ந்ததில் அதில் பயணம் செய்த அனைத்து 36 பேரும் உயிரிழந்தனர்.

# அரியலூரில் ஓய்வு பெற்ற அலுவலர் சங்க ஆர்ப்பாட்டம்



*அரியலூர் ஜூன் 15*

அரியலூரில் ஓய்வு பெற்ற அலுவலர்கள் சங்க கோரிக்கை ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

அரியலூர் தாலுகா அலுவலகம் முன்பு நடைபெற்ற, ஓய்வு பெற்ற அலுவலர் சங்கத்தின் கோரிக்கை விளக்க ஆர்ப்பாட்டத்திற்கு, சங்கத்தின் மாவட்ட தலைவர் முருகேசன் தலைமை வகித்தார். மாவட்ட துணைத் தலைவர் ரவிச்சந்திரன் வரவேற்றுபேசினார். அரசு ஊழியர்கள் சங்கத்தின் முன்னாள் மாவட்ட செயலாளர் மகாலிங்கம், முன்னாள் மாவட்ட தலைவர் பெரியசாமி உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர்.

ஓய்வூதியர்கள், குடும்ப ஓய்வூதியர்கள் தொடர்பான கோரிக்கைகள், குறித்த அறிவிப்பு அரசின் மானிய கோரிக்கையிலும் இடம் பெறவில்லை. அரசிடம் நிலுவையிலுள்ள கோரிக்கைகளுக்கு முறையாக, சரியான தீர்வு காணும் வகையில், தமிழக அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்கிற கோரிக்கையை வலியுறுத்தி, அரியலூரில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில், சங்கத்தின் மாவட்ட செயலாளர் கணேசன், மாவட்ட துணைத் தலைவர் ரவிச்சந்திரன் சங்க நிர்வாகிகள் சப்பாணி, கிருஷ்ணன் ஆசிரியர், சாமிநாதன், தங்கராசு, கலியபெருமாள், பச்சமுத்து, உள்ளிட்ட பலர் பேசினார்கள்.

ஓய்வு பெற்ற வேளாண் அலுவலர் கிருஷ்ணமூர்த்தி உள்ளிட்ட பலர் பங்கேற்ற இந்த ஆர்ப்பாட்டத்தின் முடிவில், சங்கத்தின் மாவட்ட பொருளாளர் சதாசிவம் நன்றி கூறினார்.






மதுரை, விளாக்குடியில் உள்ள ஸ்ரீ பூர்ணகலா தேவி, ஸ்ரீ புஷ்பகலா தேவி சமேத அருள்மிகு சிங்கம்பிடாரி சேவுகப் பெருமாள் அய்யனார் திருக்கோவில் மற்றும் பரிவார தெய்வங்களுக்கு ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேக விழா நடைபெற்றது. இதில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டனர்.

# திருவரங்குளத்தில் அம்பாள் நற்பணி மன்றத்தின் 31 ஆம் ஆண்டு விழா



*திருவரங்குளம் ஜூன்.15-*

புதுக்கோட்டை மாவட்டம், திருவரங்குளம், பெரியநாயகி அம்பாள் உடனுறை அரங்குளநாதர் கோவில் தேர்த் திருவிழாவை முன்னிட்டு அம்பாள் நற்பணி மன்றத்தின் 31 ஆம் ஆண்டு விழா, தமிழ்நாடு விளையாட்டுத் துறை அமைச்சர் சிவ,வீ .மெய்யநாதன் தலைமையில், அஞ்சுகா மீனாட்சிசுந்தரம் முன்னிலையில் நடைபெற்றது. திருவரங்குளம் அரசு மேல்நிலைப் பள்ளியில் மதிப்பெண் பெற்ற மாணவ மாணவிகளுக்கு பரிசுகள் வழங்கி பாராட்டு சான்றிதழ் வழங்கி தனது சொந்த நிதியிலிருந்து மாணவ மாணவிகளுக்கு கல்வி உதவித்தொகை தலா 2000 வழங்கி பாராட்டி பேசினார் .

விழாவில் திருவரங்குளம் கிழக்கு ஒன்றிய திமுக செயலாளர் கே பி கேடி தங்கமணி, திருவரங்குளம் ஊராட்சி மன்ற தலைவர் மகேஸ்வரி ஆறுமுகம், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் கருப்பையா, முன்னாள் ஒன்றிய கவுன்சிலர் ஆறுமுகம், எம்எம் பாலு, கர்ணன், ரபீக் உட்பட திமுக பிரமுகர்கள், நிர்வாகிகள் கலந்து கொண்டனர். முன்னதாக அனைவரையும் ஆசிரியர் முருகேசன் வரவேற்று பேசினார். முடிவில் ராஜ்குமார் வெள்ளைச்சாமி நன்றி கூறினார். இரவு புதுகை பாலா குழுவினரின் கிராமிய தெம்மாங்கு நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சி நடைபெற்றுக் கொண்டிருக்கும் பொழுதே நள்ளிரவு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தார் .

# புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரக வளாகத்தில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரக்கிடங்கு திறப்பு விழா



**புதுக்கோட்டை ஜூன்.15-**

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரக வளாகத்தில், ரூ.2.64 கோடி மதிப்பீட்டில் புதிதாககட்டப்பட்டுள்ள மின்னணு வாக்குப்பதிவு இயந்திரக் கிடங்கு கட்டடத்தினை, மாவட்ட ஆட்சித் தலைவர் கவிதா ராமு திறந்து வைத்தார்.

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள், கட்டுப்பாட்டு கருவி மற்றும் வாக்கினை உறுதி செய்யும் கருவி ஆகியவற்றினை பாதுகாப்பான முறையில் வைத்திடும் வகையில் மாவட்ட ஆட்சியரக வளாகத்தில் ரூ.2.64 கோடி மதிப்பீட்டில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரக்கிடங்கு கட்டடம் கட்டப்பட்டுள்ளது.

இக்கட்டடத்தில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திர பாதுகாப்பு அறை, அலுவலர்களுக்கான அறை, சோதனை அறை, சாய்வுதளம், மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களை ஏற்றி இறக்குவதற்கான இடம், கழிவறை மற்றும் பாதுகாப்பு அறைகளுடன் 755 சதுர மீட்டர் பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ளது.

மேலும் இவ்வளாகத்தில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களின் பாதுகாப்பிற்காக கண்காணிப்பு கேமரா வசதி மற்றும் தீயணைக்கும் கருவி உள்ளிட்ட பாதுகாப்பு வசதிகளுடன் அமையப் பெற்ற புதிய மின்னணு வாக்குப்பதிவு இயந்திரக்கிடங்கு கட்டிடத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் கவிதா ராமு திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் மா.செல்வி, தனி மாவட்ட வருவாய் அலுவலர் (தேசிய நெடுஞ்சாலை நிலமெடுப்பு) பெ.வே. சரவணன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) து.தங்கவேல், வருவாய் கோட்டாட்சியர்கள் அபிநயா (புதுக்கோட்டை), சு.சொர்ணராஜ் (அறந்தாங்கி), குழந்தைசாமி (இலுப்பூர்), பொதுப்பணித்துறை உதவிசெயற்பொறியாளர் பி.சிந்தனைசெல்வி, உதவிப்பொறியாளர் பாஸ்கர், தனி வட்டாட்சியர் (தேர்தல்) கலைமணி மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# அசாமில் கனமழை காரணமாக ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி 4 தொழிலாளர்கள் பலி



அசாம் ஜூன்.15-

அசாமில் கனமழை காரணமாக ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி 4 தொழிலாளர்கள் பரிதாபமாக உயிரிழந்தனர்.

அசாம் தலைநகர் கவுகாத்தியில் உள்ள போரகான் அருகே நிசார்பூரில் கனமழையால் நிலச்சரிவு ஏற்பட்டது. நிலச்சரிவு காரணமாக அங்குள்ள ஒரு வீட்டினுள் மண்சரிந்தது .அப்போது வீட்டினுள் தூங்கிக் கொண்டுந்தவர்கள் இடிபாடுகளில் சிக்கி கொண்டனர். இது தொடர்பாக தகவல் அறிந்து வந்த மீட்பு குழுவினர் இடிபாடுகளில் சிக்கிய 4 பேரை உயிரிழந்த நிலையில் மீட்டனர்.

இதுகுறித்து காவல்துறை உதவி ஆணையர் நந்தினி காகதி கூறியதாவது, உயிரிழந்த 4 பேரும் கூலித் தொழிலாளர்கள் ஆவர். இவர்கள் அப்பகுதியில் வாடகை வீட்டில் வசித்து கட்டிட வேலையில் ஈடுபட்டு வந்தார்கள் என தெரியவந்துள்ளது. சம்பவத்தின்போது 4 பேரும் வீட்டினுள் தூங்கிக் கொண்டிருந்தனர். அப்போது பெய்த கனமழையால் ஏற்பட்ட நிலச்சரிவில் வீட்டின் சுவர் இடிந்து விழுந்து மண் சரிவு வீட்டிற்குள் புகுந்தது. இதில் தொழிலாளர்கள் 4 பேரும் சிக்கிக் கொண்டனர்.

இது குறித்து உள்ளூர் வாசிகளிடம் இருந்து தகவல் தெரியவந்ததையடுத்து விரைந்து வந்து அவர்களை மீட்டோம். ஆனாலும் அவர்கள் நால்வரும் உயிரிழந்துவிட்டனர். விசாரணையில் மூன்று பேர் துப்ரிசையச் சேர்ந்தவர்கள் மற்றும் ஒருவர் கோக்ரஜாரைச் சேர்ந்தவர் என்றும் அடையாளம் காணப்பட்டுள்ளது.

அடுத்த மூன்று நாட்களுக்கு அசாம் மற்றும் மேகாலயாவில் மிக கனமழை பெய்யும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்து ரெட் அலர்ட் விடுத்துள்ளதால் மக்கள் அவசியமில்லாமல் வெளியில் செல்ல வேண்டாம் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

# குன்றாண்டார் கோவில் வட்டார வளமையத்தில் இல்லம் தேடி கல்வி திட்ட தன்னார்வலர்களுக்கு கையேடு வழங்கும் விழா



*குன்றாண்டார் கோவில் ஜூன்.15-*

குன்றாண்டார்கோவில் வட்டார வளமையத்தில் இல்லம் தேடி கல்வி திட்ட தன்னார்வலர்களுக்கு கையேடு வழங்கும் விழா நேற்று நடைபெற்றது.

ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வியின் மாவட்ட உதவி திட்ட அலுவலர் எஸ்.தங்கமணி கலந்து கொண்டு கீரனூர் குடியிருப்பு பகுதியைச் சேர்ந்த தன்னார்வலர் மலர்விழியிடம் தன்னார்வலர் கையேடு,பட அட்டைகள், கதைப்புத்தகங்கள் ஆகியவற்றை வழங்கினார்.

நிகழ்வின் போது குன்றாண்டார் கோவில் வட்டார வளமைய மேற்பார்வையாளர் (பொறுப்பு) அனிதா, ஆசிரிய பயிற்றுநர்கள் பெரியசாமி, சுரேஷ், மஞ்சு, மாரியம்மாள், வீரமணி மற்றும் இல்லம் தேடி கல்வித்திட்ட மாவட்ட ஒருங்கிணைப்பாளர் முனியசாமி,குன்றாண்டார் கோவில் ஒன்றிய ஒருங்கிணைப்பாளர் ஜெயராமன் ஆகியோர் உடன் இருந்தனர்.

# கும்மிடிப்பூண்டி அருகே கார் மோதிய விபத்தில் வடமாநில தொழிலாளி பலி

*திருவள்ளூர் ஜூன்.15-*

கும்மிடிப்பூண்டி அருகே வடமாநில தொழிலாளி கார் மோதி சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தார்

அஸ்சாம் மாநிலத்தை சேர்ந்தவர் அப்துல் காதர் (22). இவர் சென்னையில் உள்ள டீக்கடை ஒன்றில் வேலை செய்து வந்தார். இந்த நிலையில், திருவள்ளூர் மாவட்டம் கும்மிடிப்பூண்டி அடுத்த புதுவாயலில் உள்ள தனது நண்பர் ஒருவரை பார்ப்பதற்காக அப்துல்காதர் நேரில் வந்திருந்தார். இந்நிலையில், புதுவாயல் பகுதியில் சென்னை-கொல்கத்தா தேசிய நெடுஞ்சாலையை அப்துல் காதர் கடக்க முயன்றார். அப்போது சென்னையில் இருந்து ஆந்திரா நோக்கி சென்ற கார் அவர் மீது மோதியது. இதில் உடல் நசுங்கி சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தார். அவரது உடல் பிரேத பரிசோதனைக்காக பொன்னேரி அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைக்கப்பட்டது. இது குறித்து கவரைப்பேட்டை போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.



மதுரை காமராஜபுரத்தில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீவலம்புரி விநாயகர் மற்றும் ஸ்ரீ சஞ்சீவி ஆஞ்சநேயர் சுவாமி திருக்கோயிலில் 54-ஆம் ஆண்டு உற்சவ விழா நடைபெற்றது. இதன் தொடர்ச்சியாக அன்னதானம், திருவிளக்கு பூஜை , ஊர் பொங்கல் நடைபெற்றது. இவ்விழா சட்டமன்ற உறுப்பினர் பூமிநாதன் மற்றும் மண்டலத் தலைவர் முகேஷ்சர்மா தலைமையில் நடைபெற்றது. செயலாளர் முத்துராமன், சந்திரசேகரன், தங்கவேலு, மற்றும் ஏராளமான பக்தர் கலந்து கொண்டனர்.

# தக்கலை அருகே மோட்டார் சைக்கிள் மீது கார் மோதிய விபத்தில் கல்லூரி மாணவர் பலி



*நாகர்கோவில் ஜூன்.15-*

தக்கலை அருகே மோட்டார் சைக்கிள் மீது கார் மோதிய விபத்தில் கல்லூரி மாணவர் பரிதாபமாக உயிரிழந்தார்.

கேரள மாநிலம், திருவனந்தபுரம், கரமனை பகுதியை சேர்ந்தவர் சிவகுமார். இவர் திருவனந்தபுரம் மின்சார வாரியத்தில் பணியாற்றி வருகிறார். இவருக்கு இரண்டு மகன்கள் உள்ளனர். இதில் மூத்த மகன் விக்னேஷ் (21). தக்கலை அருகில் உள்ள ஒரு கல்லூரி விடுதியில் தங்கி பாராமெடிக்கல் படித்து வந்தார். இந்நிலையில், சாப்பாடு இடைவேளையின் போது இவரோடு படிக்கும் கேரள மாநிலம் களக்கூட்டம் பகுதியை சேர்ந்த முகமது சயாஸ் என்பவருடன் மோட்டார் சைக்கிளுக்கு பெட்ரோல் போடுவதற்காக இருவரும் கல்லூரியில் இருந்து புலியூர்குறிச்சிக்கு வந்து பெட்ரோல் போட்டுவிட்டு மீண்டும் கல்லூரிக்கு சென்று கொண்டிருந்துள்ளனர்.

அப்போது புலியூர்குறிச்சியை தாண்டி சென்று கொண்டிருக்கும் போது எதிரே வந்த கார் இவர்கள் வந்த மோட்டார் சைக்கிள் மீது அதிவேகமாக மோதியதில் இருவரும் தூக்கி வீசப்பட்டு ரோட்டில் விழுந்தனர். இதில் இருவரும் பலத்த காயம் அடைந்தனர். உடனே அக்கம் பக்கத்தினர் அவர்களை மீட்டு நாகர்கோவிலில் உள்ள ஒரு தனியார் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதித்தனர். பின்னர் மேல் சிகிச்சைக்காக விக்னேஷை திருவனந்தபுரத்திலுள்ள தனியார் மருத்துவமனைக்கு அழைத்து சென்றனர். அங்கு சிகிச்சை பெற்று வந்த நிலையில் விக்னேஷ் சிகிச்சை பலனின்றி பரிதாபமாக உயிரிழந்தார். இது தொடர்பாக தக்கலை போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# ஸ்ரீகாயத்ரி ஞானேந்திரர் சித்தர்கள் பீடத்தில் வைகாசி பௌர்ணமி வழிபாடு

சென்னை , ஜூன்15-

சென்னை செங்குன்றம் அடுத்த பாடியநல்லூர் வீ.எம்.ஜி பேலஸ் பின்புறம் ஈஸ்வரன் கோவில் தெருவில் அமைந்துள்ள பிரசித்தி பெற்ற ஸ்ரீகாயத்ரி ஞானேந்திரர் சித்தர்கள் பீடத்தில் உலக மக்கள் நன்மை வேண்டி வைகாசி மாதம் பௌர்ணமி சிறப்பு வழிபாடுகள் சித்தர்கள் அடியான் குருஜி ஜெ. பூபாலன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியை முன்னிட்டு வாலைக்குமரி அம்மனுக்கும், ஸ்ரீகாயத்ரிதேவி அம்மனுக்கும், 18 சித்தர்களுக்கும் வண்ண மலர்களால் அலங்கரிக்கப்பட்டு பின்னர் மகா தீபாராதனை காண்பிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து யாகசாலை பூஜை நடைபெற்றது. பின்னர் மூலவர் சிவபெருமானுக்கு பால் தயிர் தேன் பன்னீர் போன்ற பொருட்களால் அபிஷேகம் நடைபெற்றது. பின்னர் மகா தீபாராதனை காண்பிக்கப்பட்டது.



இதில் கலந்து கொண்ட பக்தர்கள் அவரவர் கோரிக்கையை ஏற்றார் போல் அகல் விளக்கேற்றியும் அர்ச்சனை செய்தும் நேற்றி கடனை பூர்த்தி செய்தனர். இந்த நிகழ்வில் வந்திருந்த பக்தர்களுக்கு விபூதி குங்குமத்துடன் பிரசாதமாக வழங்கப்பட்டது. முடிவில் பக்தர்கள் அனைவருக்கும் அறுசுவை உணவு அன்னதானமாக வழங்கப்பட்டது

# மயிலாடுதுறை அருகே கழனிவாசலில் பிரசித்தி பெற்ற ஸ்ரீ திரௌபதி அம்மன் கோவில் தீமிதி திருவிழா

குத்தாலம், ஜூன்.15:

மயிலாடுதுறை மாவட்டம், குத்தாலம் தாலுக்கா பெரம்பூர் காவல் சரகத்திற்கு உட்பட்ட கழனிவாசல் கிராமத்தில் மிகவும் பிரசித்தி பெற்ற ஸ்ரீ திரௌபதி அம்மன் கோவில் உள்ளது. இக்கோவிலின் வைகாசி பெருவிழா கடந்த மாதம் 30-ம் தேதி, கொடியேற்றத்துடன் தொடங்கியது.



அதனைத்தொடர்ந்து பக்தர்களுக்கு காப்பு கட்டப்பட்டு, வில்வளைப்பு, திரௌபதி அம்மன் திருக்கல்யாணம், கிருஷ்ணன் தூது, அரவான் பலியிடுதல், கர்ணமோட்சம் என்று வரலாறு சிறப்புமிக்க நிகழ்வுகள் தினந்தோறும் நடத்தப்பட்டது. இவ்விழாவின் முக்கிய நிகழ்வான 15-ஆம் நாளான நேற்று தீமிதி திருவிழா வெகு விமர்சையாக நடைபெற்றது. காலை பால்குடம் எடுத்தல், துரியோதனன் படுகளம் முடிந்தது. கடலாடி ஆற்றங்கரையில் இருந்து பம்பை மேளம் முழங்க பச்சைக்காளி, பவளக்காளி ஆட்டத்துடன் சக்தி கரகம் புறப்பாடு செய்யப்பட்டு மஞ்சள் உடை உடுத்தி காப்பு கட்டி விரதம் இருந்த நூற்றுக்கணக்கான பக்தர்கள் பால் காவடி, பன்னீர் காவடி, அலகு காவடி எடுத்தும், வாயில் 16 அடி நீள அலகு குத்தியும் கோவிலை வந்தடைந்தனர். அங்கு கோவில் முன்பு அமைக்கப்பட்டிருந்த தீக்குண்டத்தில் தீ மிதித்து தங்களது நேர்த்திக் கடனை செலுத்தினர். தொடர்ந்து அம்மனுக்கு சிறப்பு தீபாராதனை காட்டப்பட்டது. இதில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்துகொண்டு மாவிளக்குதீபமிட்டு அம்மனை வழிபாடு செய்தனர். மேலும், கண்கவர் வாணவேடிக்கை பொதுமக்களை உற்சாகப்படுத்தியது. தொடர்ந்து அம்மன் சிறப்பு அலங்காரத்தில் வீதி உலா நடைபெற்றது.

# திருமருகல் மகாமாரியம்மன் கோவிலில் தீமிதி திருவிழா

நாகப்பட்டினம், ஜூன்.15-

நாகை மாவட்டம் திருமருகலில் மகாமாரியம்மன் கோவில் அமைந்துள்ளது.இந்த கோவிலில் ஆண்டுதோறும் தீமிதி திருவிழா நடைபெறுவது வழக்கம்.இந்த ஆண்டுக்கான திருவிழா கடந்த 5-ம் தேதி பூச்சொரிதல் நிகழ்ச்சியுடன் தொடங்கி நடைபெற்று வருகிறது.



விழாவையொட்டி அம்மனுக்கு அபிஷேக ஆராதனையும்,சந்தனகாப்பு அலங்காரம்,கஞ்சி வார்த்தல், 10 நாட்கள் தொடர்ந்து அம்மன் அன்ன வாகனத்தில் வீதியுலா நிகழ்ச்சிகள் நடைபெற்றது.விழாவின் முக்கிய நிகழ்ச்சியான தீமிதி திருவிழா நேற்று நடைபெற்றது.இதில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டு தீ குண்டத்தில் இறங்கி தங்களது நேர்த்திக் கடன் செலுத்தினர்.

முன்னதாக அம்மனுக்கு மஞ்சள் பொடி, மாப்பொடி, பால், தயிர், பன்னீர், இளநீர், தேன், திரவியப்பொடி உள்ளிட்ட பொருட்களால் சிறப்பு அபிஷேகமும் ஆராதனையும் நடைபெற்றது. இதற்கான ஏற்பாடுகளை தலைவர் குமரகுருபரன்,செயலாளர் சேகர், பொருளாளர் சிவராமன்,ரமேஷ் மற்றும் கோவில் நிர்வாகிகள் செய்திருந்தார். திருமருகல் மகாமாரியம்மன் கோவில் தீமிதி திருவிழாவில் பக்தர்கள் தீ மிதித்த போது எடுத்தப்படம்.

# செங்கம் அருகே கோயில் கும்பாபிஷேகம்

தி.மலை , ஜூன்15-

திருவண்ணாமலை மாவட்டம் செங்கம் அடுத்த தாழையூத்து கிராமத்தில் பிரசித்தப் பெற்ற அம்மன் மற்றும் விநாயகர் கோயில் கும்பாபிஷேகம் நேற்று நடைபெற்றது. தாழையூத்து கிராமத்தில் புதியதாக கட்டப்பட்ட அம்மன் மற்றும் விநாயகர் கோயிலுக்கு மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது.



அதையொட்டி கோயிலில் யாகசாலை அமைத்து பல்வேறு சிறப்பு பூஜைகள் நடந்தன.அதிக சாதுக்கள் கலந்து கொண்டு மந்திரங்கள் முழங்க கோபுர கலசத்தின் மீது புனிதநீர் ஊற்றி கும்பாபிஷேகம் செய்தனர். இந்த விழாவில் சுற்றுப்புற கிராமங்களில் உள்ள பக்தர்கள் மற்றும் பொதுமக்கள் திரளாக பங்கேற்று வழிபட்டனர். வருகை புரிந்த பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. இதற்கான நிகழ்ச்சிகளை தாழையூத்து ஊர் பொதுமக்கள் ஏற்பாடு செய்தனர்.

# குத்தாலம் கடை விதியில் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைதுறை சார்பில் கள்ளச்சாராயத்திற்கு எதிரான விழிப்புணர்வு பிரச்சாரம்

குத்தாலம், ஜூன்.15

மயிலாடுதுறை மாவட்டம், மாவட்ட ஆட்சியர் லலிதாவின் ஆணைக்கிணங்க குத்தாலம் கடை வீதியில் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைதுறை சார்பில் கள்ளச்சாராயத்திற்கு எதிரான விழிப்புணர்வு பிரச்சாரம் நடைபெற்றது.



இந்த விழிப்புணர்வு பிரச்சாரத்தில் கள்ளச்சாராயத்தை பற்றியும் மது அருந்திவிட்டு வாகனத்தை ஓட்டும் போது ஏற்படும் விபத்துக்களை பற்றியும் பல்வேறு விழிப்புணர்வு கருத்துக்களை எடுத்துரைத்தனர்.

இதில் குடித்துவிட்டு வாகனம் ஒட்டுவதால் கிடைப்பது சிற்றின்பம் அதுவே உன் குடும்பத்திற்கு பெருந்துன்பம், என்றும் குடும்பவாழ்க்கையை நேசி குடித்துவிட்டு வாகனம் ஒட்ட யோசி, என்றும் குடித்து விட்டு சாவியை எடு மரணம் எனும் பூட்டை திறந்திடு எனவும் பல்வேறு விழிப்புணர்வுகளை பாட்டுப் பாடியும்,நடனமாடியும், பட்டிமன்ற விவாதங்கள் ஆகவும் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை சார்பில் வந்த குழுவினர் எடுத்துரைத்தனர்.

அமிர்தம் ஸ்டோர்ஸ் A/C
♦ பாத்திரங்கள் ♦ பர்னிச்சர்ஸ் ♦ எலக்ட்ரானிக்ஸ்
♦ பிளாஸ்டிக்ஸ் ♦ பேக்ஸ்
கீழ 2ம் வீதி, புதுக்கோட்டை. போன் : 04322 290395
www.amirthamstores.co.in amirthammetals@gmail.com



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை முகாம் அலுவலகத்தில் நடிகர் கமல்ஹாசன் விக்ரம் திரைப்படம் வெற்றி பெற்றதையொட்டி சந்தித்தார்.



புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் அடுத்த கடம்பபட்டி கிராமத்தில் 100 நாள் வேலைக்கு சென்ற ஊராட்சி பெண்களை கேவலமாக பேசிய புலிவலம் கிராமத்தைச் சேர்ந்த திமுக பிரமுகர் சுப்பிரமணி மீது நடவடிக்கை எடுக்கக் கோரி வீர முத்தரையர் முன்னேற்ற சங்கம் சார்பாக நமணசமுத்திரம் காவல்துறையில் நேற்று புகார் அளிக்கப்பட்டது. சுப்பிரமணி மீது நடவடிக்கை இல்லை என்றால் விரைவில் திருமயத்தில் மிகப்பெரிய ஆர்ப்பாட்டம் நடைபெறும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.



திருவள்ளூர் அருகே மணவாள நகரில் அதிமுக ஒன்றிய மகளிர் அணி செயலாளர் . ரமாதேவி நெடுஞ்செழியன் மகள் வழி பேத்தி நிலா அறிவூட்டும் நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் பி.வி. ரமணா பங்கேற்றார். உடன் கட்சி நிர்வாகிகள் இருந்தனர்.



திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் நேற்று நடைபெற்ற மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் முதுகுத்தண்டுவடம் பாதிக்கப்பட்ட மூன்று மாற்றுத்திறனாளிகளுக்கு தலா ரூ1,05,000/- வீதம் ரூ 3,15 000/-ஆயிரம் மதிப்பிலான மின்சாரத்தால் இயங்கும் சிறப்பு சக்கர நாற்காலிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் ஆல்பி ஜான் வர்கீஸ் வழங்கினார். உடன் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் பாபு மற்றும் முடநீக்கு வல்லுநர் ஆஷா ஆகியோர் உள்ளனர்

# பள்ளி கட்டிடம் சீரமைக்கப்படாததால் சீர்காழி தாலுகா அலுவலகத்தை முற்றுகையிட்டு போராட்டம்

சீர்காழி, ஜூன். 15-

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி தாலுகாவிற்கு உட்பட்ட நெப்பத்தூர் ஊராட்சி உள்ளது. இந்த ஊராட்சியில் அக்ரகார தெருவில் சுமார் 150 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட பழமையான ஓட்டுக் கட்டிடத்தில் மீனாட்சி அரசு உதவிபெறும் தொடக்கப்பள்ளி செயல்பட்டு வருகிறது.

இந்த பள்ளியில் தற்பொழுது நெப்பத்தூர் தீவு கிராமத்தை சேர்ந்த சுமார் 50க்கும் மேற்பட்ட மாணவர்கள் படித்து வருகின்றனர். இந்நிலையில் மேற்கண்ட பள்ளி கட்டிடம் கடந்த சில ஆண்டுகளாக இடப் பிரச்சினை காரணமாக பராமரிக்கப்படாததால் சிதிலமடைந்து சேதமடைந்த நிலையில் உள்ளது. மேலும் எந்த நேரம் வேண்டுமானாலும் இடிந்து விழுந்து விபத்து ஏற்படும் நிலையில் உள்ளது.

இந்நிலையில் கடந்த இரண்டு ஆண்டுகளாக பள்ளியில் பயிலும் மாணவர்களின் பெற்றோர்கள் பள்ளி கட்டிடத்தை சீரமைக்க வேண்டும் அல்லது வேறு பாதுகாப்பான இடத்தில் பள்ளிக்கூடத்தை மாற்ற வேண்டும் என தொடர்ந்து அரசுக்கு கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

ஆனால் இதுநாள் வரை பள்ளி கட்டிடம் சீரமைக்கப்படாத தால் அச்சமடைந்த பெற்றோர்கள் நேற்று சீர்காழி தாலுகா அலுவலகத்திற்கு நேரில் வந்து முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவரும், பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவருமான ராமசாமி தலைமையில் பள்ளியில் பயிலும் மாணவர்களின் பெற்றோர்கள் 50க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். ஆர்ப்பாட்டத்தின்போது நெபத்தூர் ஊராட்சியில் சிதிலமடைந்த கட்டிடத்தில் செயல்படும் மீனாட்சி அரசு உதவி பெறும் தொடக்கப் பள்ளி கட்டிடத்தை உடனடியாக சீரமைக்க வேண்டும்.

அல்லது வேறு இடத்திற்கு பள்ளிக்கூடத்தை மாற்றவேண்டும் இல்லை என்றால் வருகிற 24-ஆம் தேதி வெள்ளிக்கிழமை சீர்காழி தாலுகா அலுவலகத்தை முற்றுகையிட்டு போராட்டம் செய்வோம் என கோரிக்கைகளை வலியுறுத்தி கோஷங்கள் எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதனை தொடர்ந்து மேற்கண்ட கோரிக்கைகளை வலியுறுத்தி சீர்காழி தாசில்தார் அலுவலகத்தில் கோரிக்கை மனுக்களை கொடுத்து விட்டு கலைந்து சென்றனர். இதனால் சிறிது நேரம் தாலுக்கா அலுவலக வளாகத்தில் பரபரப்பு ஏற்பட்டது.

# திருக்கண்ணபுரம் சவுரிராஜ பெருமாள் கோவில் பிரம்மோற்சவ விழா தேரோட்டம்

நாகப்பட்டினம், ஜூன்.15-

திருமருகல் ஒன்றியம் திருக்கண்ணபுரத்தில் சவுரிராஜபெருமாள் கோவில் அமைந்துள்ளது. இக்கோவில் வைணவ தலங்களில் திவ்ய தேசம் என்று அழைக்கப்படும் 108 திருத்தலங்களில் 17-வது தலமாக போற்றப்படுகிறது.



ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப் பட்ட பெருமையுடைய இந்த கோவிலில் ஆண்டுதோறும் வைகாசி மாதம் பிரம்மோற்சவ விழா நடைபெறுவது வழக்கம். அதன்படி இந்த ஆண்டு பிரம்மோற்சவ விழா கடந்த 6-ம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கி பல்வேறு வாகனங்களில் பெருமாள் வீதி உலா,தங்க கருட சேவை,வெள்ளை சாத்தி புறப்பாடு உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகிறது.

விழாவின் முக்கிய நிகழ்ச்சியான சௌரிராஜ பெருமாள்,பத்மினி தாயார் திருக்கல்யாண உற்சவம் நேற்று முதல் நாள் இரவு நடைபெற்றது.தொடர்ந்து நேற்று பெருமாள் உபநாச்சியார்கள் நால்வருடன் திருத்தேரில் எழுந்தருளி தேரோட்டம் நிகழ்ச்சி நடைபெற்றது.

இதில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்து தேரை வடம் பிடித்து இழுத்தனர். விழாவையொட்டி, வருகிற 17-ஆம் தேதி வெள்ளி ரத புறப்பாடும், 18-ஆம் தேதி விடையாற்றியும் நடைபெறுகிறது. இதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் கோவில் தக்கார் சீனிவாசன்,செயல் அலுவலர் மாதவன், ஒன்றியக்குழு தலைவர் ராதாகிருட்டிணன், கணக்கர் உமா மற்றும் கோவில் நிர்வாகிகள் செய்திருந்தனர்.

# தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக கிடங்கில் மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர் ஆய்வு

தரங்கம்பாடி , ஜூன்15-

தரங்கம்பாடி வட்டம், செம்பனார்கோவில் அருகே உள்ள கிடாரம் கொண்டான் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக கிடங்கில் மயிலாடுதுறை மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர் ஆய்வு செய்தார்.



கிடங்கிலிருந்து தரங்கம்பாடி வட்டத்தில் உள்ள நியாயவிலை கடைகளுக்கு அனுப்பி வைக்கப்படும் அத்தியாவசிய பொருட்களின் தரம் குறித்தும், பொருட்களின் இருப்பு குறித்தும், நகர்வு பணி குறித்தும் ஆய்வு செய்தார். மேலும், ஜூன் மாதத்திற்கான நகர்வு பணியினை எதிர்வரும் 20-ஆம் தேதிக்குள் முடித்திட தரக்கட்டுப்பாட்டு அலுவலர் ராகவனிடம் அறிவுறுத்தினார்.

மேற்படி ஆய்வின்போது தரங்கம்பாடி வட்ட வழங்கல் அலுவலர் பாபு, கிடங்கு உதவியாளர் மணிகண்டன், நகர்வு எழுத்தர்கள் பிரதீப் குமார், வித்யாசாகர் மற்றும் வடிவேல் ஆகியோர் உடன் இருந்தனர்.

# தச்சூர் முதல் சித்தூர் வரையில் ஆறு வழி சாலை அமைக்கும் பணிக்கு விவசாயிகள் கடும் எதிர்ப்பு: போராட்டத்தில் ஈடுபட்டதால் தற்காலிகமாக பணி நிறுத்தப்பட்டது

ஊத்துக்கோட்டை, ஜூன்15-

திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி அருகே உள்ள தச்சூர் முதல் ஆந்திர மாநிலம் சித்தூர் வரையில் சுமார் 128 கிலோ மீட்டர் தூரத்துக்கு ஆறு வழிச்சாலை அமைக்கும் பணியை மத்திய அரசு துவங்கியது. இப்பணிக்கு ரூ.3,200 கோடியை மத்திய அரசு தேசிய நெடுஞ்சாலை துறை ஆணையத்துக்கு ஒதுக்கியுள்ளது.



இந்நிலையில், எல்லாபுரம் ஒன்றியத்திலுள்ள சுமார் 15 கிராமங்களில் மூன்று போகம் விளையும் விவசாய நிலங்களை கையகப்படுத்த தேசிய நெடுஞ்சாலை துறை ஆணையம் முற்பட்டது. இந்நிலையில்,இப்பணியை மேற்கொள்ள கூடாது என விவசாயிகள் தொடர்ந்து எதிர்ப்பைத் தெரிவித்த வண்ணம் பல்வேறு கட்ட போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். இந்நிலையில், எல்லாபுரம் ஒன்றியம்,ஆலப்பாக்கம் ஊராட்சிக்கும்-வடமதுரை ஊராட்சிக்கும் இடைப்பட்ட பகுதியில் உள்ள விளைநிலத்தில் தேசிய நெடுஞ்சாலைத்துறை ஆணைய அதிகாரிகள் நேற்று காலை பொக்லைன் எந்திரம் மூலம் விவசாய நிலத்தை சமன் படுத்தும் பணியை மேற்கொண்டனர்.

இதுகுறித்து தகவலறிந்த விவசாயிகள் சங்க மாவட்ட தலைவர் சம்பத்,மாநிலத் தலைவர் துளசி நாராயணன்,புஞ்சை நில விவசாயிகள் சங்க தலைவர் ஸ்ரீராமுலு ரெட்டி,செயலாளர் சசிகுமார், பொருளாளர் குணசேகர் ரெட்டி உள்ளிட்ட ஏராளமானோர் விவசாய நிலத்தை சமப்படுத்தும் பணி நடைபெற்றுக் கொண்டிருந்த இடத்திற்கு அதிரடியாக வந்தனர். பின்னர், பொக்லைன் இயந்திரத்தை முற்றுகையிட்டு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனால் நெடுஞ்சாலைத்துறை அதிகாரிகள் இயந்திரங்களை எடுத்துக்கொண்டு மின்னல் வேகத்தில் பறந்து சென்று விட்டனர்.இதனால் பணி நடைபெற்ற விவசாய நிலத்தில் அமர்ந்து தர்ணா போராட்டம் மேற்கொண்டனர். மேலும்,விவசாய நிலங்கள் பாதிக்காத வண்ணம் மாற்றுப்பாதையில் சாலை அமைக்க வேண்டும்,பணி ஆணையில் உள்ள விவரங்கள் அடங்கிய பட்டியலை காண்பிக்க வேண்டும், நிலம் கையகப்படுத்த 80 சதவீத விவசாயிகளின் ஒப்புதலைப் பெற வேண்டும்,மாற்றாக தரிசு நிலங்களை விவசாயிகளுக்கு வழங்க வேண்டும் என்பது உள்ளிட்ட 6 அம்ச கோரிக்கையை வலியுறுத்தி தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

சம்பவ இடத்துக்கு ஊத்துக்கோட்டை துணை போலீஸ் சூப்பிரண்டு சாரதி தலைமையில் நூற்றுக்கணக்கான போலீசார் விரைந்து வந்து போராட்டத்தில் ஈடுபட்டவர்களிடம் சமரச பேச்சுவார்த்தை நடத்தினர். இதில், சுமூக தீர்வு கிடைக்கவில்லை.இதனால், நிலம் கையகப்படுத்தும் தாசில்தார் லியோ போராட்டக்காரர்களிடம் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டார்.இதிலும்,சுமூக தீர்வு கிடைக்கவில்லை. எனவே, விவசாயிகள் தொடர்ந்து தர்ணா போராட்டத்தில் ஈடுபட்டனர். மேலும்,மத்திய-மாநில அரசுகளை கண்டித்து கோஷம் எழுப்பினர். இதன்பின்னர், தேசிய நெடுஞ்சாலை துறை ஆணைய தாசில்தார் ஹரிகிருஷ்ணன் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து போராட்டத்தில் ஈடுபட்டவர்களிடம் சமரச பேச்சுவார்த்தை மேற்கொண்டார்.தங்களது கோரிக்கைகள் நிறைவேறும் வரை போராட்டத்தை கைவிட மாட்டோம் என்றும் சமைத்து சாப்பிட்டு இங்கேயே உறங்கி போராட்டத்தைத் தொடர்வோம் என்று கூறினர்.

இதனையடுத்து தற்காலிகமாக பணியை நிறுத்துவதாக தாசில்தார் ஹரி கிருஷ்ணன் கூறினார். மேலும்,ஆறு வழிச்சாலை சம்பந்தமாக சமாதான கூட்டம் ஒன்று நடத்தப்படும் என்றும் அக்கூட்டத்தில் எடுக்கப்படும் முடிவுக்கு பின்னரே பணி துவங்கும் என்றும் உறுதியளித்தார். இதன் பின்னர்,அனைவரும் அமைதியாக கலைந்து சென்றனர். இப்பிரச்சினையால் சுமார் 3 மணி நேரம் இப்பகுதியில் பதட்டமும், பரபரப்பும் நிலவியது.

# தொழிற்பயிற்சி நிலையங்களை தரம் உயர்த்த முதலமைச்சர் முன்னிலையில் கையெழுத்து



சென்னை ஜூன்.15-

தொழிற்பயிற்சி நிலையங்கள், முன்னணி தொழில்நிறுவனங்களுடன் இணைந்து சுமார் ரூ.2,877 கோடி செலவில் தொழில்நுட்ப மையங்களாக மாற்றப்பட உள்ளன.

அரசு தொழிற்பயிற்சி நிலையங்களை தொழில்நுட்ப மையங்களாக தரம் உயர்த்துவது தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் நேற்று கையெழுத்தானது. சென்னை தலைமைச் செயலகத்தில் நேற்று, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில், தமிழ்நாடு அரசின் வேலைவாய்ப்பு மற்றும்பயிற்சித்துறைக்கும், புனேவில் உள்ள டாடா டெக்னாலஜிஸ் நிறுவனத்திற்கும் இடையே இந்த ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது. இதன்படி தொழிற்பயிற்சி நிலையங்கள், முன்னணி தொழில்நிறுவனங்களுடன் இணைந்து சுமார் ரூ.2,877 கோடி செலவில் தொழில்நுட்ப மையங்களாக மாற்றப்பட உள்ளன.

இதன் மூலம் ரோபோட்டிக்ஸ், இண்டஸ்ட்ரியல் ஆட்டோமேஷன், இண்டஸ்ட்ரியல் பெயிண்டிங், அட்வான்ஸ்ட் வெல்டிங் உள்ளிட்ட நவீன திறன் பயிற்சிகள் மாணவர்களுக்கு வழங்கப்பட இருக்கின்றன. மேலும் இந்த ஒப்பந்தத்தின் மூலமாக தனியார் தொழிற்பயிற்சி நிலைய மாணவர்கள், பொறியியல் கல்லூரி மாணவர்கள், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் பணியாளர்கள் உள்ளிட்டோர் பயன்பெறுவார்கள் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.






▶ புதுக்கோட்டை ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில், ஊராட்சி செயலாளர்களுக்கான வாராந்திர ஆய்வுக் கூட்டம் வட்டார வளர்ச்சி அலுவலர் குமாரவேலன் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் புதுக்கோட்டை ஒன்றியத்தில் உள்ள 27 கிராம ஊராட்சி செயலர்களுக்கு ஹெச்ஐவி- முன்னெச்சரிக்கை தடுப்பு நடவடிக்கை மேற்கொள்வது தொடர்பாக எடுத்துக் கூறப்பட்டது. அதனைத்தொடர்ந்து பிஎம்ஏவை திட்டம், அண்ணா கிராம மறுமலர்ச்சி திட்டம், எம் ஜி என் ஆர் இ ஜி எஸ் திட்டம் மற்றும் ஜே ஜே எம் திட்டம், 14 வது நிதிக்குழு மானியம் மற்றும் 15 வது நிதிக்குழு ஆணையம் ஆகியவற்றில் முன்னேற்றம் தொடர்பாகவும் ஆய்வுக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. இக்கூட்டத்தில் மாவட்ட ஹெச்ஐவி தடுப்பு தலைவர் ராமசாமி, துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் பால்.பிரான்சிஸ், சதீஷ்குமார், சத்தியமூர்த்தி மற்றும் அலுவலக பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

# திருமயம் ஊராட்சி குப்பைக்கிடங்கை மீட்டுத் தர கோரிக்கை



திருமயம். ஜூன்15

புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் ஊராட்சித்தலைவர் சிக்கந்தர், மாவட்ட கலெக்டருக்கு ஒரு கோரிக்கை மனு அனுப்பியுள்ளார். அவர் அந்த மனுவில் கூறியிருப்பதாவது,

திருமயம் ஒரு கிராம ஊராட்சியாகும். அதன் தலைவராக நான் பணிபுரிகிறேன். இங்கு 10 ஆயிரம் பேர் வசிக்கின்றனர். ஊராட்சிக்கு என காரைக்குடி சாலையில் 50 சென்ட் இடம் குப்பைக்கிடங்கிற்கு ஒதுக்கப்பட்டிருந்தது. இங்கு பஸ்நிலையம், கடைவீதி, கோட்டை, பாப்பாவயல்பகுதிகளில் சேகரிக்கப்படும் குப்பைகள் தினசரி கொட்டப்பட்டுவருகிறது.

கடந்த சுமார் 50 ஆண்டுகளாக ஊராட்சி நிர்வாகம் பொதுநலனுக்காக பயன்படுத்தி வந்த இதனை தற்போது வருவாய்துறையினர் விதிமுறைகளை மீறி 8 பேருக்கு வீட்டுமனைப் பட்டாக்களாக உரிமை மாற்றம் செய்துள்ளனர். என தெரியவருகிறது பட்டாவாங்கியவர்கள் ஊராட்சியின் குப்பைகளை அகற்றி, தொடர்ந்து குப்பை கொட்ட ஆட்சேபித்து வருகின்றனர்.

எனவே மாவட்ட கலெக்டர் அதனை பார்வையிட்டு பட்டாக்களை ரத்து செய்து குப்பைக்கிடங்கை மீட்டுத்தருமாறு கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு அந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## டெல்லியில் இன்று குடியரசுத் தலைவர் தேர்தலில்

# பொது வேட்பாளரை நிறுத்துவது தொடர்பாக மம்தா பானர்ஜி தலைமையில் ஆலோசனைக் கூட்டம்

**திமுக, காங்கிரஸ் கட்சிகள் பங்கேற்பு**



டெல்லி ஜூன்.15-

குடியரசுத் தலைவர் தேர்தலில் பொது வேட்பாளரை நிறுத்துவது தொடர்பாக டெல்லியில் இன்று மம்தா பானர்ஜி தலைமையில் நடைபெறும் ஆலோசனையில் காங்கிரஸ், தி.மு.க. உள்ளிட்ட கட்சிகள் பங்கேற்க உள்ளன.

நாட்டின் 15-வது குடியரசுத் தலைவரை தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல், அடுத்த மாதம் 18-ம் தேதி நடைபெற உள்ளது. இதில் பதிவாகும் வாக்குகள், ஜூலை மாதம் 21-ம் தேதி எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்படும். அரசியல் கட்சிகள் ஒருங்கிணைந்து பொது வேட்பாளருக்கு ஆதரவு அளித்தால், தேர்தல் நடைபெறாமல், அவர் போட்டியின்றி தேர்வு செய்யப்படுவார். தேர்தல் நடைபெற்றால், குடியரசு தலைவரை, நாடாளுமன்ற உறுப்பினர்கள், எம்.எல்.ஏ.க்கள் தேர்ந்தெடுப்பர்.

இதற்கிடையே, எதிர்க்கட்சிகள் சார்பில் குடியரசுத் தலைவர் தேர்தலில், பொது வேட்பாளராக, தேசியவாத காங்கிரஸ் தலைவர் சரத்பவாரை அறிவிக்க, காங்கிரஸ் கட்சி முடிவு செய்துள்ளதாக தகவல் வெளியாகியது. ஆனால் இந்தத் தகவலை, சரத்பவார் மறுத்துள்ளார். இந்நிலையில், திரிணாமூல் காங்கிரஸ் கட்சித் தலைவரும், மேற்கு வங்க மாநில முதலமைச்சருமான மம்தா பானர்ஜி தலைமையில், டெல்லியில் இன்று, குடியரசுத் தலைவர் வேட்பாளர் தொடர்பாக, எதிர்க்கட்சிகள் கூட்டம் நடைபெற உள்ளது. இந்தக் கூட்டத்தில், காங்கிரஸ் கட்சியும் பங்கேற்க உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டத்தில், காங்கிரஸ் தலைவர்கள் மல்லிகார்ஜுன கார்கே, ஜெய்ராம் ரமேஷ், ரந்தீப் சுர்ஜேவாலா ஆகியோர் பங்கேற்க உள்ளனர். மேலும், சரத்பவாரும் கலந்துகொள்ள உள்ளதாக கூறப்படுகிறது. தி.மு.க. சார்பில் மக்களவை குழுத் தலைவர் டி.ஆர். பாலு கலந்து கொள்ள உள்ளார். இதேபோல், இந்திய கம்யூனிஸ்ட் மற்றும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிகள் பங்கேற்க உள்ளதாக மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் சீதாராம் யெச்சூரி தெரிவித்துள்ளார். பா.ஜ.க.வுக்கு கடும் போட்டி அளிக்கக்கூடிய வகையில், பொது வேட்பாளரை களமிறக்கும் பணிகளில், எதிர்க்கட்சிகள் தீவிரம் காட்டி வருகின்றன.

# விரைவு ரயில்களை தனியாருக்கு விற்பதை கண்டித்து அரியலூரில் எஸ்ஆர்எம்யு ஆர்ப்பாட்டம்



அரியலூர் ஜூன்.15-

விரைவு ரயில்களை தனியாருக்கு விற்பதை கண்டித்து அரியலூரில் எஸ் ஆர் எம் யு சார்பில், கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

திருச்சி ரயில்வே கோட்டத்திற்கு உட்பட்ட, சதன் ரயில்வே மஸ்தூர் யூனியன் எனப்படும், எஸ் ஆர் எம் யு அரியலூர் கிளை சார்பில், அரியலூர் ரயில் நிலைய வளாகத்தில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு, சங்கத்தின் அரியலூர் கிளை செயலாளர் செல்வகுமார் தலைமை வகித்தார்.

சுற்றுலா என்ற பெயரில், கோவை -சீரடி விரைவு ரயிலை தனியாருக்கு விற்பதை உடனடியாக விலக்கிக் கொள்ள வேண்டும். ராமாயண யாத்திரை என்ற பெயரில் தில்லி- கேப்பார் ரயிலை ஐ ஆர் சி டி சிக்கு விற்பனை செய்வதை வாபஸ் வாங்க வேண்டும். பாரத் கவுரவ் என்ற பெயரில் 100 சுற்றுலா ரயில்களை தனியாருக்கு விற்பனை செய்யும் முடிவை, மத்திய ரயில்வே அமைச்சகம் உடனே கைவிட வேண்டும். உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி, அரியலூரில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில், எஸ் ஆர் எம் யு அரியலூர் கிளை தலைவர் வேல்முருகன், உதவி செயலாளர்கள் ரகு, கார்த்தி, கண்ணன், அருண், மகளிரணி சுகன்யா உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

அரியலூர் ரயில்வே ஆர் பி எஃப் போலீஸ் இன்ஸ்பெக்டர் சுப்பிரமணியன், உதவி துணை ஆய்வாளர் சிவக்குமார், ஏட்டு மணிவேல் உள்ளிட்ட போலீசார், பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்தனர்.

# தஞ்சாவூரில் உலக ரத்ததான தின விழிப்புணர்வு நடை பயணம்



தஞ்சை ஜூன்.15-

தஞ்சாவூரில் உலக ரத்ததான தினம் விழிப்புணர்வு நடை பயணத்தினை டிஐஜி கயல்விழி தொடங்கி வைத்தார்.

இரத்த தானம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் ஆண்டுதோறும் ஜூன் 14 ந் தேதி உலக இரத்த தான தினமாக கொண்டாடப்படுகிறது. இதனையடுத்து தஞ்சாவூர் மீனாட்சி மருத்துவமனை மற்றும் செஞ்சிலுவை சங்கம் சார்பில் தஞ்சையில் உலக ரத்ததான தினம் விழிப்புணர்வு நடைப்பயணம் நடைபெற்றது.

இந்த நடை பயண விழிப்புணர்வு பேரணியை தஞ்சை சரக டிஐஜி கயல்விழி செஞ்சிலுவை சங்க ஆலோசகர் வரதராஜன், குழந்தை இயேசு தேவாலய பங்கு தந்தை அம்புரோஸ் ஆகியோர் கொடியசைத்து துவக்கி வைத்தனர். தஞ்சை குழந்தை இயேசு கோவில் பகுதியில் இருந்து தொடங்கிய இப்பேரணியில் மக்களிடம் ரத்ததானம் வழங்குவது குறித்து விழிப்புணர்வு பதாகைகளை கல்லூரி மாணவ மாணவிகள் 500-க்கும் மேற்பட்டோர் எடுத்துச் சென்றனர்.

இப்பேரணியில் கூடுதல் எஸ்.பி பிருந்தா மற்றும் இண்டாக் செயலாளர் முத்துக்குமார், மருத்துவமனை பொது மேலாளர் பாலமுருகன், இரத்த மண்டல வங்கி மருத்துவர் ஆர்த்தி, அவசர சிகிச்சை துறை தலைவர் சரவணவேல், மக்கள் தொடர்பு அதிகாரி மணிவாசகம் உள்ளிட்ட மருத்துவர்கள், செஞ்சிலுவை சங்க நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# புனல்குளம் தொகுப்பு துணை மின் நிலையத்தில் மாதாந்திர பராமரிப்பு பணிகள் நடைபெறுவதால் மின் விநியோகம் நிறுத்தம்

புனல்குளம் ஜூன்.15-

110/ 33-11 கி.வோ. புனல்குளம் தொகுப்பு துணை மின் நிலையத்தில் நாளை(16.06.2022)மாதாந்திர பராமரிப்பு பணிகள் நடைபெறுவதால், இந்த துணை மின் நிலையத்தில் இருந்து மின் விநியோகம் பெரும் புனல்குளம், தெத்துவாசல்பட்டி, மஞ்சப்பேட்டை, தச்சங்குறிச்சி, விராலிப்பட்டி, நத்தமாடிபட்டி, சோழகம்பட்டி, நொடியூர், கோமாபுரம், சமுத்திரப்பட்டி, கொத்தம்பட்டி, அரியாணிப்பட்டி, காடவராயன்பட்டி, புதுநகர், முதுகுளம் ஆகிய பகுதிகளுக்கும் மற்றும் 11/ 33 கி.வோ. குளத்தூர் நாயக்கர்பட்டி துணை மின் நிலையத்தில் இருந்து மின் விநியோகம் பெறும் குளத்தூர் நாயக்கர் பட்டி, நடுப்பட்டி, சேவியர் குடிகாடு, ஆத்தங்கரைப்பட்டி, சாமிப்பட்டி, கீராத்தூர், பருக்கைவிடுதி, குளத்தூர், மூக்கப்புடையான்பள்ளம் ஆகிய பகுதிகளுக்கும் நாளை காலை 9 மணி முதல் மதியம் 2 மணி வரை மின் விநியோகம் இருக்காது என புனல்குளம் தொகுப்பு துணை மின் நிலைய உதவி செயற்பொறியாளர் (பராமரிப்பு) வில்சன் தெரிவித்துள்ளார்.

# மதுரை அருகே வரதட்சணை கொடுமையால் இளம்பெண் தற்கொலை

**கணவர், மாமியாருக்கு 7 ஆண்டுகள் சிறை**

மதுரை ஜூன்.15-

மதுரை அருகே வரதட்சணை கொடுமையால் மனைவி தூக்கிட்டு தற்கொலை செய்துகொண்ட வழக்கில், கணவர் மற்றும் மாமியாருக்கு 7 ஆண்டுகள் சிறை தண்டனை வழங்கி மகிளா நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது.

மதுரை மாவட்டம், சோழவந்தான், ஊமச்சிகுளத்தைச் சேர்ந்தவர் ராஜசேகர். இவருக்கும் பழங்காநத்தம் பகுதியைச் சேர்ந்த பிரீத்தா என்பவருக்கும் கடந்த 2010 ஆம் ஆண்டு திருமணம் நடைபெற்று ஒரு குழந்தையுடன் அதே பகுதியில் வசித்து வந்துள்ளனர்.

இந்நிலையில் கணவர் ராஜசேகர், நகை மற்றும் பணம் வரதட்சணையாக கேட்டு மனைவி பிரீத்தாவை அடிக்கடி கொடுமைப்படுத்தி வந்துள்ளார். இதனால் மனமுடைந்த பிரீத்தா கடந்த 2011 ஆம் ஆண்டு தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டார்.

இதுகுறித்துசமயநல்லூர் காவல்துறையினர் கணவர் ராஜசேகர் மற்றும் அவரின் தாயார் சகுந்தலா ஆகிய இருவர் மீதும் வரதட்சணை கொடுமை செய்ததாக வழக்குப்பதிவு செய்தனர். இந்நிலையில், இந்த வழக்கு விசாரணை மதுரை மாவட்ட மகிளா நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது.

இந்நிலையில், இந்த வழக்கின் விசாரணை நேற்று மதுரை மாவட்ட மகிளா நீதிமன்ற நீதிபதி கிருபாகரன் மதுரம் முன்பாக விசாரணைக்கு வந்தது. அப்போது மனைவியை வரதட்சணை கேட்டு கொடுமைப்படுத்தி தற்கொலைக்கு தூண்டிய ராஜசேகர் மற்றும் அவரது தாயார் சகுந்தலா ஆகிய இருவருக்கும் 7 ஆண்டு சிறை தண்டனையும், ராஜசேகருக்கு 2 லட்சம் ரூபாய் அபராதமும், தாயார் சகுந்தலாவுக்கு 50 ஆயிரம் ரூபாய் அபராதமும் விதித்து உத்தரவிட்டார்.

# கறம்பக்குடி காவல் நிலையத்தில் முற்றுகைப் போராட்டம்



கறம்பக்குடி ஜூன்.15-

கறம்பக்குடி அருகே தற்கொலைக்கு தூண்டியதாக கைது செய்யப்பட்டவர்களை விடுவிக்க கோரி கறம்பக்குடி காவல் நிலையத்தை முற்றுகையிட்டு போராட்டம் நடத்தியதால் பரபரப்பு ஏற்பட்டது.

புதுக்கோட்டை மாவட்டம், கறம்பக்குடி தாலுகா, நரங்கியப்பட்டு வைரவன் தெருவைச் சேர்ந்த வேம்பையன் மகன் சத்யராஜ். இவருக்கு திருமணமாகி மனைவி மற்றும் ஒருமகன் உள்ளனர். இந்நிலையில் தனது ஊரின் அருகாமையில் உள்ள வேறு சமூகத்தை சேர்ந்த பெண்ணுடன் ஐந்து வருடங்களாக தகாத உறவு வைத்துக் கொண்டதாக கூறப்படுகிறது. இந்நிலையில் சத்தியராஜ் அந்த பெண்ணின் வீட்டிற்கு சென்ற நிலையில் அப்பகுதியை சேர்ந்தவர்கள் சத்யராஜை தாக்கி காயம் ஏற்படுத்தினர். அதன்பிறகு அவரது தந்தைக்கு தொலைபேசி வழியாக தகவல் அளித்து அவரை அழைத்துச் செல்லுமாறு தகவல் அளித்தனர். தகவலின் அடிப்படையில் அவரது தந்தை சத்யராஜை அழைத்துக்கொண்டு வீட்டிற்கு சென்றார். தன்னால் வலி தாங்க முடியாமல் மன உளைச்சல் ஏற்பட்டு தனது வீட்டின் பின்புறம் உள்ள மரத்தில் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டார்.

இது சம்பந்தமாக காவல்துறைக்கு தகவல் அளிக்கப்பட்டது. வழக்கு பதிவு செய்தால் தான் பிரேதத்தை எடுத்துச் செல்ல முடியும் என்று அப்பகுதி பொதுமக்கள் காவல் துறையினரிடம் வாக்கு வாதத்தில் ஈடுபட்டனர். காவல்துறை சார்பில் புதுக்கோட்டை கூடுதல் போலீஸ் சூப்பிரண்டு கீதா, ஆலங்குடி துணை போலீஸ் சூப்பிரண்டு வடிவேல், வட்டாட்சியர் விஸ்வநாதன் ஆகியோர் பேச்சுவார்த்தை நடத்தி சத்யராஜை தாக்கியவர்கள் மீது உடனடியாக நடவடிக்கை எடுப்பதாக கூறி வாக்குறுதி அளித்தனர். அதன் பிறகு சத்யராஜின் உடல் பிரேத பரிசோதனைக்காக புதுக்கோட்டை மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பிவைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து விசாரணை அடிப்படையில் 4 பேரை காவல்துறையினர் கைது செய்தனர்.

இந்நிலையில் கைது செய்யப்பட்ட 4பேரையும் விடுதலை செய்யக்கோரி கைது செய்யப்பட்டவர்களின் உறவினர்கள் மற்றும் அப்பகுதியை சேர்ந்தவர்கள் 50க்கும் மேற்பட்டோர் கறம்பக்குடி காவல் நிலையத்தை முற்றுகையிட்டு ஆர்ப்பாட்டம் நடத்தினர். இதனால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது. புதுக்கோட்டை கூடுதல் காவல் கண்காணிப்பாளர் கீதா, ஆலங்குடி துணை போலீஸ் சூப்பிரண்டு வடிவேல் ஆகியோர் போராட்டத்தில் ஈடுபட்டவர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தினர். இதில் உடன்பாடு ஏற்பட்டதையடுத்து முற்றுகை போராட்டம் கைவிடப்பட்டது.

# சம்பட்டிவிடுதி ஊராட்சி

புதுக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், புதுக்கோட்டை மாவட்டம்.

## வாரசந்தை ஏல அறிவிப்பு

புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், சம்பட்டிவிடுதி ஊராட்சிக்கு சொந்தமான பொதுச் சந்தையின் **2022-2023 ம் ஆண்டுக்கான ஏலம்** எதிவரும் **20.06.2022 காலை 11.00 மணிக்கு சம்பட்டிவிடுதி ஊராட்சி மன்ற அலுவலக வளாகத்தில் சம்பட்டிவிடுதி ஊராட்சி மன்றத் தலைவர்** அவர்களால் கண்காணிப்புக்குழு முன்பாக நடைபெற உள்ளது. ஏலத்தில் கலந்து கொள்பவர்கள் கீழக்கண்ட நிபந்தனைகளின் அடிப்படையில் ஏலத்தில் கலந்துகொள்ள அறிவிக்கப்படுகிறது.

### ஏல நிபந்தனைகள்

01. ஏலம் ஊராட்சி மன்ற அலுவலகத்தில் மேற்குறிப்பிட்ட விவரபடி ஊராட்சித் தலைவர் **(Executive Authority)** அவர்களால் நடத்தப்படும்.
2. ஏலம் எடுப்பவர் ஏல நிபந்தனைகளை முழுமையாக பூர்த்தி செய்தல் வேண்டும்.
3. மேற்படி சந்தை ஏலம், சந்தையில் தற்காலிகமாக அமைக்கப்படும் காய்கறிக்கடைகள் காய்கறிகளை ஏற்றி வரும் லாரி போன்ற இதர வாகனங்கள், வண்டிகள். தற்காலிக மீன்கடைகள், மீன் ஏற்றி வரும் லாரி / இதர வாகனங்கள் ஆகியவற்றின் உரிமையாளர்களிடம் அவ்வப்போது நிர்ணயிக்கப்படும் குறைந்தபட்ச கட்டணங்களை வசூலிப்பதற்கான ஏலம் மட்டுமே ஆகும்.
4. ஏலம் அமலில் உள்ள காலம் 20.06.2022 முதல் 19.06.2023 முடிய உள்ள காலமாகும்.
5. ஏலம் உரிய முறையில் நடைபெறுவதை மூன்று உறுப்பினர்கள் கொண்ட ஊராட்சிக் குழு கண்காணித்து உறுதி செய்யும்.
6. ஏலத்தின் குறைந்தபட்ச உத்தேச மதிப்பு விபரம் ஏலம் ஆரம்பிப்பதற்கு முன்பாக ஏலம் நடத்தும் அதிகாரியால் (ஊராட்சித் தலைவரால்) அறிவிக்கப்படும்.
7. ஏலத்திற்கான வைப்புத் தொகை மற்றும் ஆரம்பத் தொகை **ரூ.25.000/** (ரூபாய் இருபத்தி ஐயாயிரம் மட்டும்) என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.
8. ஏலத்தில் கலந்து கொள்பவர் சரியான முகவரிக்குரிய ஆதார் அட்டை நகல், குடும்ப அட்டை நகல் **ரூ.25,000/** (ரூபாய் இருபத்தி ஐயாயிரம் மட்டும்)-த்திற்கான சால்வன்சி சான்றிதழுடன் ஆரம்பத்தொகை மற்றும் வைப்புத் தொகையுடன் சமர்ப்பிக்க வேண்டும்.
9. ஊராட்சியில் ஏற்கனவே எவ்வித் ஏலத்தொகையும் செலுத்துவதில் நிலுவையிருப்பவர்கள் இந்த ஏலத்தில் கலந்து கொள்ள முடியாது.
10. ஏலம் எடுப்பவர் ஏல விதிகளையோ இதர அலுவகை விதிகனையோ மீறினால் அல்லது விதிகளை மீறி சந்தையில் கட்டுமானம் ஏதும் கட்டினால் உடன் ஏலத்தை ரத்து செய்ய ஊராட்சிக்கு அதிகாரம் உண்டு.
11. ஏலப் போட்டியின் மூலம் கூடுதல் தொகைக்கு ஏலம் எடுத்தவர் உடன் ஏலத் தொகை முழுவதையும் ஊராட்சியில் செலுத்தி இரசீது பெற்றுக்கொள்ள வேண்டும்.
12. ஏலம் எடுக்கும் வாய்ப்பை இழந்தவருக்கு ஆரம்பத்தொகை மற்றும் காப்பு வைப்புத் தொகை உடன் திரும்ப வழங்கப்படும்.
13. ஏலம் எடுத்தவரின் ஆரம்பத்தொகை மற்றும் காப்பு வைப்புத் தொகையை ஏலம் நடைபெறும் ஆண்டின் ஊராட்சி தணிக்கை முடிந்த பின்னர் தனிக்கைத் தடை ஏதுமில்லை என உறுதி செய்த பின்னர் திரும்ப வழங்கப்படும்.
14. ஏலம் ஊராட்சி மற்றும் ஊராட்சிகளின் ஆய்வாளர் (மாவட்ட ஆட்சித்தலைவர்) ஆகியவர்களின் ஒப்புதல் பெறப்பட்ட பின்னரே ஏலம் உறுதி **(Confimation of Action)** செய்து ஆணையிடப்படும்.
15. ஏலம் உறுதி செய்யப்பட்டு ஆணையிடப்பட்ட பின்னர், ஏலம் எடுத்தவர் **ரூ.20/** க்கான பத்திரத்தில் ஏல நிபந்தனைகள், ஏலதாரர் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் குறித்து ஊராட்சித் தலைவருடன் ஒப்பந்தம் செய்து கொண்ட கையெழுத்திட்ட பத்திரத்தை **(Deed Agreement)** ஊராட்சியில் ஒப்படைக்க வேண்டும்.
16. ஏல ஒப்பந்தப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்ட பின், ஏலத்திற்கான ஏல அலுவலக நிபந்தனைக் கடிதம் **(Licence)** வழங்கப்படும்.
17. இந்த ஏலம் ஊராட்சிகளின் ஆய்வாளர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் அவ்வப்போதைய நிபந்தனைகளுக்கும் உட்பட்டதாகும்.
18. ஏலம் நடைமுறையில் உள்ள காலத்தில் பொது நலன் கருதி. எவ்வித காரணங்களும் குறிப்பிடாமல், ஏலத்தை தள்ளி வைக்கவோ அல்லது இரத்து செய்யவோ ஊராட்சி நிர்வாகத்திற்கு அதிகாரம் உண்டு.
19. ஏலம் எடுத்தவர் கடைகளில் கட்டணம் வசூல் செய்வதற்கான ரசீது புத்தகங்கள், தினசரிப் பதிவேடுகள் முதலியவற்றை ஊராட்சியின் அலுவலக முத்திரை பெறப்பட்ட பின்னரே பயன்படுத்த வேண்டும். அலுவலக முத்திரை இல்லாத ரசீதுகள் / பதிவேடுகள் செல்லாது.
20. சந்தை ஏலம், கட்டணம் ரசீது. பதிவேடு முதலியவற்றை வாரம் ஒருமுறை (வெள்ளிக்கிழமை) ஊராட்சியில் காண்பித்து சரிபார்க்கப்பட்டு ஊரட்சி தலைவரது ஒப்பம் பெறவேண்டும்.

**தலைவர், ஊராட்சி மன்றம், சம்பட்டிவிடுதி.**

Owned & Published by **S.Sivasakthivel**, Published From : Plot No. 1103, Periyar Nagar, Rajagopalapuram Post, Pudukkottai, and Printed By: **K.selvaraj** Printed at: Jayam Offset Printers, 5623, South 4th Street, Pudukkottai. Editor: **S.Sivasakthivel**. Phone:04322-261577.
**Chennai Office: Chief Reporter S.Kadar Hussain,** ISR MEDIA ONE, Old no:112, New no:235, 4th floor, Angappa Naicken Street, Parrys, Chennai-600 001. (Near GT Court Way). PH-9840728971. E-Mail:pudugaivaralaru@gmail.com, pudugaivaralaru2@gmail.com, pontimesrep@gmail.com

# 18 மாதத்தில் 10 லட்சம் பேருக்கு வேலை பிரதமர் அறிவிப்பு





# புதுக்கோட்டையில் கல்யாண மன்னன் குடும்பத்தாருக்கு சிறை

# ஆலங்குடி அருகே கட்டிட வசதி இன்றி செயல்படும் பள்ளிக்கூடம்



சென்னை / புதுக்கோட்டை | 15.06.2022 | varalaruu.com | பக்கம்:4 | ரூ.10

புதுகை

வரலாறு

நாளிதழ்

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

பருமலா திருமேனி , இந்திய ஆயர், புனிதர் (பி.1848) (இ.1902)



டி. ஆர். பாலு , இந்திய அரசியல்வாதி (பி.1941)




க. நெடுஞ்செழியன் , தமிழக எழுத்தாளர் (பி.1944)



## இன்றைய நினைவு நாள்

கே. ஏ. நீலகண்ட சாஸ்திரி , இந்திய வரலாற்றாளர், திராவிடவியலாளர் (பி.1892) (இ.1975)



டி. எஸ். இராமஸ்வாமி பிள்ளை , தமிழக அரசியல்வாதி (பி.1918) (இ.2006)



மணிவண்ணன் , தமிழகத் திரைப்பட நடிகர், செயற்பாட்டாளர் (பி.1954) (இ.2013)



## உலகக் காற்று நாள்